செ.வெ.எண் : 79 நாள் : 02-02-2020

# தஞ்சாவூர் பெருவுடையார் கோவில் குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவசரகால முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டார்

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் பெருவுடையார் கோவில் குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவசரகால முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று(02.02.2020) நேரில் பார்வையிட்டார்.

தஞ்சாவூர் திலகர் திடலில் அவசரகால ஊர்திகளை பார்வையிட்ட பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

தஞ்சை பெருவுடையார் கோயில் திருக்குடமுழுக்கு விழாவிற்கு அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. பக்தர்கள் எவ்வித இடையூறும் இல்லாமல் கோவிலுக்கு வந்து செல்லும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடமுழுக்கு விழாவிற்கு வரக்கூடிய பக்தர்களுக்கு மருத்துவ வசதிகள் செய்வதற்கு சுகாதாரத்துறை சார்பில் 5 இருசக்கர ஆம்புலன்ஸ்களும், கோவிலின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் 7 அதிநவீன ஆம்புலன்ஸ்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்காலிக வாகன நிறுத்துமிடங்கள், உள்ளே மற்றும் வெளியே செல்லும் வழிகள் உள்ளிட்ட இடங்களில் அவசர தேவைக்காக 16 எண்ணிக்கையில் 108 ஆம்புலன்ஸ்கள் நிறுத்தப்பட உள்ளது. ஆறு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு, தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, போதுமான மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. 26 நடமாடும் மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ராசா மிராசுதார் அரசு மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை வார்டுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் நகரத்தில் இருக்கும் அனைத்து தனியார் மருத்துவமனைகளிலும் அவசர சிகிச்சை பிரிவுகளை தயார் நிலையில் வைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. பக்தர்கள் நல்ல முறையில் தரிசனம் செய்திடும் வகையில் அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததார்.

இந்நிகழ்வின் போது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர். குமுதா லிங்கராஜ் மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.